**குண்டசாலை பிரதேச சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய தினசரி தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைகள் தொடர்பில் விஷேட நிதி ஒதுக்கீடு உட்படும்.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதிக் கூற்றக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுககளை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 15,383 ஆன தொங்கல் கணக்கு மீதியொன்று தீர்வு செய்யப்படாமல் நடைமுறைப் பொறுப்பின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | இக் குறைபாடடை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கின் மீதிகள் இனங் காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 6,098,117 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,295,535 என ரூபா 8,197,418 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்பட்டிருந்தது | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மொத்தம் 87,739,984 ஆன 03 சொத்துக் கணக்கு விடயங்களுக்கும் ரூபா 310,962,383 ஆன 02 பொறுப்புக் கணக்குகளுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 398,702,367 ஆகவும் அதற்குரிய பயன்பாட்டு பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ஒப்பிடும் போது ரூபா 418,224,872 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | வேறுபாடுகளை இனங் கண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா 307,877,527 ஆன 09 சொத்து கணக்கு விடயங்களுக்கும் ரூபா 50,270,669 ஆன 06 பொறுப்புக்கள் விடயங்களுக்கும் உரிய நாளது வரையாக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாது இருந்தது. | நீர் நிர்மாண களஞ்சிய இருப்பு மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஏனைய பதிவேடுகளை நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு உரிய அனைத்து தகவல்களையும் முன் வைக்க வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஹொட்டல்களின் வருமானத்தில் 1 சதவீதத்தை மிகைக்காத கட்டணங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹொட்டெல் ஒன்றால் சபைக்கு சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாமல் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு களுக்காக குறித்துரைக்கப் பட்ட கட்டணங்களை விட ரூபா 14,462,640 தொகை குறைவாக | நிலுவைக் கட்டணங்களை அறிவிடுவதற்கு வழ்குத் தொடருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு பெற வேண்டிய வருமானங்களை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட ரூபா 17,033,789 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,544,674 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,567,788 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நிதி சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவதற்கு அல்லது சட்டத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபை பராமரித்துச் செல்லும் நடைமுறைக் கணக்கில் ரூபா 11,536,299 முதல் ரூபா 73,432,281 வரையான வீச்சில் பணம் மீளாய்வாண்டு முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது. | அபிவிருத்தி செயற் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு வந்ததுடன் மேலும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் உரித்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மேலதிக பணம் தொடர்பாகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு வீதவரி மற்றும் வீதவரி நிலுவை ரூபா 26,922,093 ஆக இருந்ததுடன் அந்நிலுவையில் ஆண்டினுள் ரூபா 5,886,533 தொகையும் ஆண்டின் பட்டியலிடல் ரூபா 37,152,599 ஆலும் ஆண்டினுள் ரூபா 14,763,207 என மொத்தம் 20,649,740 தொகை அறவிட்ட காரணமாக வீதவரி அறவீடு 32 சதவீதமாக இருந்தது. பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். | இதற்காக கொவிட் தொற்று நிலைமை தாக்கமளித்து இருந்ததுடன் வருமானத்தைக் கொடுப்பனவு செய்ய வாடிக்கையாளருக்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மெனிக்கின்ன புதிய வியாபாரத் தொகுதி 29 கடைகளுடன் காணப்பட்டதுடன் அதில் 02 அறைகள் 2016 ஜூலை 14 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகை அடிப்படையில் வழங்காமை காரணமாக ரூபா 239,700 ஆன வருமானம் சபையால் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குத்தகைக்கு வழங்கிய 27 கடைகளில் 20 கடைகளுக்குரிய ரூபா 312,360 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைத் தொகையில் 2022 ஜூலை 26 ஆம் திகதி வரை ரூபா 126,310 அறவிடப்பட்டிருந்ததாகவும் அறவிடப்படாதுள்ள நிலுவையை அறவிடுவதற்கும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 33 கடைகளுடன் கூடிய திகன பலநோக்குக் கட்டிடத்துக்காக 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமல் பொதுச் சபையில் முன்மொழியப்பட்ட அதற்குக் குறைந்த கட்டணத்தை அறவி விட்ட காரணத்தால் ரூபா 4,187,000 ஆன நட்டம் சபைக்கு இடம்பெற்றிருந்தது. | புதிய மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது கிடைத்ததன் பின்னர் அதன் பிரகாரம் கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |
| ((ஈ) | பலகொல்ல மொரகஹபிட்டிய வியாபார கடைத் தொகுதியின் கடைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் உரிய கூலி அறவிடப்பட வேண்டிய போதிலும் 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் மேல் மாடியின் கடையொன்றுக்காக ரூபா 500 வீதமும் கீழ்மாடியின் கடையொன்றுக்காக ரூபா 1,000 வீதமும் அறவிடுவதற்கு முன்மொழியப்பட்டு அவ் வாடகையை அறவிடாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,771,000 ஆன வருமானமொன்று சபையால் இழக்கப்பட்டிருந்தது. | இழக்கப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பாக 2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நிதி மற்றும் கொள்கைக் குழு மூலம் புதிய மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக குத்தகையாளர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடொன்றைப் பெற்று அதன் பிரகாரம் கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரஜவெல நகரின் சிறுவர் பூங்காவொன்று நிர்மாணிப்பதற்காக இலங்கை மஹவலி அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்த காணி மஹவெலி அதிகாரசபையின் அங்கீகாரமின்றி நவீன உபகரணங்களுடன் கூடிய பலநோக்கு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நிர்மாணத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 607,063 தொகை மற்றும் இந்த பல்நோக்கு கட்டிட நிர்மாணத்தை தடை செய்வதற்காக பிரதேசத்தின் வியாபார சங்கத்தினால் கொழும்பு மேன்மறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை காரணமாக அதற்காக முன்னிப்பதற்காக ரூபா 1,500,000 ஆன சட்டத்தரணிகள் கட்டணங்கள் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்த காரணத்தால் மொத்தம் ரூபா 2,107,063 ஆன விளைவற்ற செலவினமொன்று சபைக்கு செலவிட நேர்ந்திருந்தது. | நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் மீண்டும் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க இருப்பதால் செயற்திட்டத்துக்கு ஆரம்பத்தில் செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றல்ல என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் குறித்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் காணிகளின் உரித்து தீர்வு செய்யப்பட்டு நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 12,366,000 பெறுமதியான பெல் இயந்திரம் மற்றும் கழிவுப் பொருட்களின் ஈரத்தை அகற்றும் இயந்திரம் அலுத்வத்த கழிவுப் பொருள் தொகுதியில் நிறுவப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரத்தை செயற்படுத்தும் மின்னோட்ட இயலளவு போதியளவு இல்லாமையால் மின்மாற்றி ஒன்று பொருத்தி இருந்ததுடன் அதன் பிரகாரம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டும். |